விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 9 ஜூலைகஸ் 17 இதழ் 165

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-7-1986

● முல்லைத்தீவிலிருந்து திருமலைக்கு

## பரீட்சை எழுத படகில் சென்ற மாணவரும் படகும் எங்கே?

### படையினர் கொண்டுசென்றதாக தகவல்

மூதூர் வியாழன்

முல்லைத்தீவு அகதிகள் முகாமிலிருந்து தமது சொந்த இடமான திருமலைக்கு அகதிகள் சென்ற 3படகுகளில் ஒன்று காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட்மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தமிழ் மாணவர்களும் அவர்களின் பெற்றோருமாக நூற்றுக்குமேற்பட்டோர் முல்லைத்தீவிலிருந்து திருமலை நோக்கி 3 படகுகளில் சென்றனர்.

நேற்றுமுன்தினம் இம்மூன்று படகுகளும் புறப்பட்டன. நேற்று அதிகாலை 4மணியளவில் இருபடகுகள் மாத்திரம் திருமலையைச் சென்றடைந்தன.

பின்னர் மூன்றாவது படகைத்தேடி மற்ற இருபடகுகளும் கரையிலிருந்து 30 மைல் தூரத்திலுள்ள புடவைக்கட்டு

(5ம பக்கம் பார்க்க)

● இருதினங்களில் மற்றொரு திகில்:

# பாதுகாப்புடன்சென்றபஸ்ஸில் குண்டு வெடித்து 34 பேர் பலி!

## மதவாச்சிப்பகுதியில்சம்பவம்

(வவனியாவிலிருந்து நமது நிருபர்)

**பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் பார்சல் குண்டு வெடித்து 34பேர் கொல்லப்பட்டனர். 30பேர் படுகாயமுற்றனர்.**

**அநுராதபுரம் டிப்போவுக்குச் சொந்தமான இந்த பஸ் வவனியாவிலிருந்து அநுராதபுரம் சென்றுகொண்டிருக்கையில் மதவாச்சிக்கு ஒருமைல் தொலைவிலுள்ள பூனாவை என்ற இடத்தில் குண்டு வெடித்துச் சிதறியது.**

**இருதினங்களின் முன்னரே மாமடுவையில் பஸ்ஸில் குண்டுவெடித்து 38 பிரயாணிகள் பலியாயினர்.**

வவனியாவிலிருந்து நேற்றுக் காலை மதவாச்சி ஊடாக அனுராதபுரம் நோக்கி இந்த பஸ் புறப்பட்டது.

குண்டு வெடிப்புக்கிலக்கான இந்த பஸ்ஸுக்கு முன்னால் மற்றொரு பஸ் புறப்பட்டுச் சென்றுவிட்டது அடுத்துப் புறப்பட்ட இந்த பஸ்ஸுக்கு முன்னால் பாதுகாப்புக் கருதி இராணுவத்தினரைக் கொண்ட கவச வண்டிகள் சென்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை மாமடுவையில் இடம்பெற்ற பஸ் கண்ணிவெடிச் சம்பவத்தில் பலியானவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டுவிட்டுத் தங்கள் சொந்த இடங்களுக்கு இந்த பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தவர்களே இக்குண்டு வெடிப்பில் அதிகமாகச் சிக்கியவர்களெனத் தெரியவருகிறது.

மதவாச்சியிலிருந்து ஒருமைல் தூரத்தில் பூனாவை என்னும் இடத்தில் பகல் 11மணியளவில் இந்த பஸ் சென்றுகொண்டிருந்தபோது பார்சல் குண்டு வெடித்தது. பஸ் சின்னாபின்னமாகச் சிதைந்தது.

பலருடைய உடல்கள் அடையாளம் காணமுடியாதநிலையில் உருக்குலைந்து காணப்பட்டன. படுகாயமடைந்தவர்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கும் பின்னர் கோட்டை ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிக்கும் அவசரமவசரமாக எடுத்துச்செல்லப்பட்டனர்.

### 3 தமிழர்கள்

அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சுந்தரலிங்கம் (அரியாலை), சதாசிவம், சுப்பிரமணியம் ஆகிய 3 தமிழர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் வாகனங்கள் அநுராதபுரத்திற்கு அண்மையில் வைத்துச் சேதமாக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளன எனினும் செய்தி அச்சுக்குப்போகும்வரை விபரமெதுவும் கிடைக்கவில்லை.

(5ம் பக்கம் பார்க்க)

அடுத்த மாத மத்தியில்

## கூட்டணிக் குழு மீண்டும் இலங்கை வரும்

கொழும்பு வியாழன்

இலங்கை அரசாங்க தலைவர்களுடன் கடந்த பதினொரு நாட்களாக இனப்பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் எதுவித உறுதியான தீர்வுமின்றி நேற்று மாலை த.வி.கூட்டணி உறுப்பினர்கள் சென்னை திரும்பினர்.

அதிகாரப் பரவலாக்கம், மாகாணசபைகளை ஏற்படுத்தல் தொடர்பான இலங்கை அரசின் புதிய திட்டங்கள் இந்திய அரச அதிகாரிகளால் த.வி. கூட்டணியிடம் இந்தியாவில் வைத்து கையளிக்கப்பட்டது தெரிந்ததே.

(5-ம் பக்கம் பார்க்க)

மேலதிக நேர சம்பளம் கோரிய

## ஐந்து யாழ். இளைஞர்களுக்கு சவுதியில் எச்சரிக்கை

(சவுதியில் இருந்து எம். சுபேந்திரன்)

சவுதி அரேபியாவின் தலைநகரான றியாட்டில் கம்பனி ஒன்றில் வேலை செய்வதில் பிரச்னையை ஏற்படுத்திய யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஐவருக்கு தொடர்ந்தும் இங்கே பிரச்னையை ஏற்படுத்த முயன்றால் இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இவர்கள் பணியாற்றும் கம்பனி எச்சரிக்கை விடுத்துள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

ஊர்காவல்படையினருக்குள்

## பழைய பகைமை கொலையில் முடிந்தது

மூதூர், வியா

இரு ஊர்காவல் படையினர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த பழைய பகைமை கொலையில் முடிந்தது.

திருமலை மாவட்டத்திலுள்ள மொறவெவ பொலிஸ் பகுதியில் இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த 21ம் திகதி இரவு கோமரங்கடவெவப் பகுதியில் 'சென்றி'யில் ஊர்காவல்படையைச் சேர்ந்த பியசேனகே திஸநாயக்காவும் (22 வயது) உக்குபண்டாகே திஸநாயக்கா (24 வயது) என்பவரும் கடமையிலீடுபட்டிருந்தனர்.

உக்குபண்டா என்பவர் பியசேனகே என்பவரைத்துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார்.

மரணவிசாரணை நடத்திய பதில்நீதவான் எம்.கே.செல்வராசா உக்குபண்டா என்பவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

முகாம் விஸ்தரிப்பில்—

## குடிபெயர்ந்த முப்பது குடும்பங்களுக்கு உதவி

வசாவிளான், புதன்

கடந்த ஞாயிறன்று மயிலிட்டி தெற்குப் பிரஜைகள் குழு அரிசி முதலிய நிவாரணப் பொருட்களை இராணுவ முகாம் விஸ்தரிப்புக் காரணமாகப் பாதிக்கப்பட்ட 30குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது.

மயிலிட்டி தெற்குப் பிரஜைகள் குழுப் பிரிவிலிருந்து 125 குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு முற்றாக வெளியேறியுள்ளபோதிலும், இராணுவத்தினரால் எரிக்கபபட்டு முற்றாக வீடுகளை இழந்துள்ள 30

[5-ம் பக்கம் பார்க்க]

## இலங்கையில் பங்களாதேஷ் ஜனாதிபதி

கொழும்பு, வியா.

பங்களாதேஷ் ஜனாதிபதி ஜெனரல் எர்சாத் மூன்று நாடுகளுக்கான தமது சுற்றுப் பயணத்தைமேற்கொண்டு நேற்று முற்பகல் மாலைதீவிலிருந்து கொழும்புவந்துள்ளார். மூன்று தினங்கள் இவர் இங்கு தங்கியிருப்பார்.

ஜெனரல் எர்ஷாத் தெற்காசிய

(5ம் பக்கம் பார்க்க)

# தமிழ்பகுதிகள் இன்று பூரணமாகஸ்தம்பிக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

இனப் படுகொலைகளை ஆட்சேபித்துத் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் இன்று வெள்ளிக்கிழமை எதிர்ப்புநாள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இன்று காரியாலயங்கள் மூடப்படும். ஊழியர்கள் வேலைக்குச் செலலமாட்டார்கள். போக்குவரத்து நடைபெறாது. வர்த்தக நிலையங்கள் கதவடைப்பை மேற்கொள்ளும் பாடசாலைகள் நடைபெறமாட்டா.

இன்று மக்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக ஒவ்வொரு தொகுதியிலும் இணைப்புக் குழு ஏற்பாடு செய்யும் இடங்களில் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்துவார்கள். தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், அன்னையர் உட்பட பொதுமக்கள் அனைவரும் இன்று நடைபெறும் எதிர்ப்புக் கூட்டங்களில் பங்குபற்றுமாறு தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டததின் இணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது

இணைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ் பேசும் மக்களுக்கெதிரான பேரினவாத அரசின் ஒடுக்குமுறை 1983 ஜுலையில் தேசிய அளவிலான இனக்கலவரமாக வெடித்தது. தொடர்ந்து இவ்வடக்குமுறை அரச பயங்கரவாத இராணுவ நடவடிக்கைகள்மூலம் இனப்படுகொலையாகத் தொடர்கிறது.

சாதாரண தமிழ்பேசும் மக்கள் இராணுவத்தினராலும், ஊர்காவற் படையினராலும், காடையர்களாலும் கேள்விமுறையின்றிக் கொல்லப்படுவது நாளாந்த நிகழ்ச்சியாகிவிட்டது. அத்தோடு விமானக் குண்டு வீச்சுக்கள், கடற்படையின் பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை 5500க்கு மேற்

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோப்பாயில் கிரசரும் [16-10] இசுசு டிப்பர் லொறியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R பாலகிருஷ்ணன், இருபாலை ரோட் கோண்டாவில். [C 3656]

### தேவை

எவ்வகை இனமாயினும் இறைச்சிக்குக் கோழி தேவை. கிலோ 30/-க்கு மேற்பட்ட பல விலைகளில் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Phone: 23131. [C 3640]

மண்ணெண்ணை அல்லது மின்சாரத்தில் இயங்கும் [Incubator] குஞ்சுபொரிக்கும் மெசின் சிறிது பிழையிருப்பினும் தேவை. தயவுசெய்து விலை விபரங்களை கீழ்காணும் விலாசத்துக்கு எழுதுங்கள். ரேடியோ மனுவல், 121, ஸ்ரான்லிவீதி, யழ்ப்பாணம் [C 3643]

பெற்றோர் இல்லாத பிள்ளைகளை வளர்ப்பதற்கு முழுப் பொறுப்பையும் கொடுக்க விரும்புபவர்கள் நேரில் கூட்டி வரவும். 27-7-86 (காலை 9-00 12-00 மணிக்குமிடையில்), கலைஞானி 11/7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C-3675]

### சேவை

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வாங்கவும், விற்கவும் தொடர்புகொள்ளவும்! Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி [3ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம். [C 3647]

கருவாடுக்கேற்ற அரைத்த உப்புத்தூள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M G M 777, K. K. S. Road, Jaffna. T. P 22611 [C 3365]

### கல்வி

மீண்டும் கிடைக்கும் - A/L ஆகஸ்ட் 86 மாணவரின் வேண்டுகோளுக்கிணங்க 8 வருட கடந்தகால வினாக்களும், விடைகளும் தமிழ், இந்து நாகரிகம், வணிகமும் நிதியியலும். உயர் கல்விப் பதிப்பக வெளியீடுகள். உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. (C 3618

### வகுப்புக்கள்

Electronic Engineering வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம், Radio and T. V. (Antenna, Deck), வாகனத்திற்கான வயறிங், பிளம்பிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். வெளிநாடு செல்பவர்களுக்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall, (ஆனைப் பந்திச் சந்திக்கருகாமையில்), 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3631)

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது

★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடு நேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது
(A-768)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி புவனேந்திரராணி தில்லநாதன்**

தோற்றம்: 06-05-1951
மறைவு: 06 08-1985
திதி: 25-07-1986

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கும், கணவன், மகள், குடும்பத்தவர்கள்.

மூத்ததம்பி ஒழுங்கை. மானிப்பாய். C 3665

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. வி. கந்தசாமி**

பிறப்பு: 25-03-1933
இறப்பு: 25-07-1983

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த நீங்கள் 3 ஆண்டுகள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் தங்கள் திருவுருவமும், நினைவும் எமது உள்ளத்தில் எப்பொழுதும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். தங்கள் பிரிவால் வாடும் மனைவி, மக்கள், சகோதரர்கள், மாமியார், மைத்துனர்.

வேலணை வடக்கு, வேலணை. C 3436

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் காசிப்பிள்ளை சுரேஸ்குமார்**


மலர்வு: 03-10-1959
உதிர்வு: 25-07-1983

மூன்று ஆண்டுகள் மறைந்தாலும் உன் நினைவு எம்மனதில் எவ்வாண்டும் வாழுமப்பா. எவ்வாண்டும் வாழுமப்பா. கொடியவரின் இனவெறிக்கு கொதித்தெட்ட 83ல்மடிந்திட்டாய் புவிதனிலே, மறந்திடோம் உன் நினைவு. ஏறு போல் நடையும் உன் எழில் உருவும் எம் நெஞ்சில் மாறாத்துயரை வளர்த்துச் சென்றதுவே. உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

அன்பு அம்மா. அண்ணா, அக்கா, மைத்துனர்.

வேலணை மேற்கு, வேலணை, 6. (C3664)

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சின்னப்பு சத்தியேஸ்வரன் (சத்தி)**

அன்னைமடியில்: 7-10-1951
அரன் அடியில்: 25-07-1983

எங்கள் அருந்தவப் புதல்வ! ஆருயிர்த் தம்பி! முல்லைச் செடிக்குத் தேரைக் கொடுத்தான் பாரி. புறாவிற்காகத் தன்னையே ஈய்ந்தான் சிபிச் சக்கரவர்த்தி. கிருஷ்ண பரமாத்மாவிடம் தனது புண்ணியத்தையே கொடுத்தான் கொடை வள்ளல் கர்ணன். ஆனால் நீயோ! தமிழர் உயிரையும், தமிழ் மண்ணையும் காப்பாற்ற உன்னையே அர்ப்பணித்தாய். ஆனால் நாங்களோ! உன் உயிரற்ற உடலைக் கூடக் காணாத பாவிகளானோம். எங்கள் உயிர் உள்ளவரை உன்பிரிவால் உருகி, உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,

அன்பு பப்பா. அம்மா. சகோதர, சகோதரிகள். மைத்துனர், மருமக்கள்.

''திருத்தணிகை'', அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (C 3633)

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி




**ஆறுமுகம் ஜோன தேவராஜா**

என்றும் உம்நினைவு நிலைத்து நிற்க இன்றும் எமது அஞ்சலிகள்.

மனைவி, பிள்ளைகள்.

புலோலி மேற்கு, பருத்தித்துறை. C 3667

## மூன்றாமாண்டு நினைவஞ்சலி




**கந்தசாமி பிரேமச்சந்திரகுமார்**
[M. Sc. பொறியியலாளர்]

தோற்றம்: 11-11-1949
மறைவு: 25-07-1983

உம்மூச்சு நின்று ஆண்டு மூன்றாகிடினும் நின் முகம் எம் நெஞ்சை விட்டகலவில்லை - கண்ணே! உம்பிரிவால் என்றும் துயருறும்: அன்புப் பெற்றோர்.

153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 3612

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



**மாரிமுத்து சிவராசா**


ஆண்டவன் படைப்பில்: 28-11-1948
அரக்கர் அழிப்பில்; 25-07-1983

''மண்ணுலக வாழ்வில் நீவிர் மகிழ்வுடனே திகழ்ந்த காலம், விண்ணுலகையடைந்திட்டாலும், விடுபடாதெம் நெஞ்சங்களில்''

நின் பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், தாய், சகோதரர், சகோதரிகள், நண்பர்கள்.

நாவலர் பாடசாலையடி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (C 3679)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவசுப்பிரமணியம் சிவநாதன்**

அன்னை மடியில் 20-5-1954
ஆண்டவன் மடியில்: 25-07-1983

செல்வா செல்வா அருள் பொருளே உன் அன்புக்கு நிகரோ நீரோர் திருவுருவே. இனிமை முகத்தைத் தேடுகிறோம். எங்கள் இதயம் நொந்தே வாடுகிறோம். உதித்த சூரியனின் உங்கள் முகமும் ஒளிவிடும் நட்சத்திர உன் உள்ளச் சிரிப்பும் பளிச்சிடும் நிலவினில் உங்கள் பாசத்தையும் பார்த்திடும் நாள் இனி எப்பவருமோ.

அன்புத் தாய், அருமைச் சகோதரர்கள், உறவினர்கள், மைத்துனர் ச. லோகேஸ்வரநாதன்.

வேலணை மேற்கு. வேலணை. (C 3639)

## மூன்றாமாண்டு நினைவஞ்சலி



**செல்வன் அ. சுதாகரன்**

மலர்வு: 21-10-1962
உதிர்வு; 25-07-1983

உருவத்தால் அர்ச்சுனனே எங்கள் நெஞ்சில் உலாவி வரும் சித்திரமே கமலக் கண்ணா, கோரச் சிறையின் பிடியிலிருந்து விடுபட்டு பின்னர் வீரத்தாயின் விலங்குடைக்க வருவாய் என்றல்லவா எண்ணியிருந்தோம் இறைவா, நேர்மைவழி தவறி எம்நெஞ்சம் துடிதுடிக்க ஆசைமகனை அதிக தூரம்அழைத்துச் சென்றுவிட்ட நீ அவசரம் அவர் போன்றவர்களதும் இலட்சியங்கள் நிறைவேறவும் ஆத்மா சாந்தியடையவும் அருள்புரிய வேண்டுகின்றோம் அப்பனே. அம்மா, அப்பா, சகோதரர்கள்.

74/6, கந்தர்மடம், யாழ்ப்பாணம். C 3690

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### 13-வது காமன்வெல்த்

# விளையாட்டுப் போட்டிகள் எடின்பரோவில் ஆரம்பம்

## 32 நாடுகள் பகிஷ்கரிப்பு

எடின்பரோ, ஜூலை-24

**பதின்மூன்றுவது காமன்வெல்த் விளையாட்டுக்கள் இன்று எடின்பரோவில் ஆரம்பமாகியுள்ளன. மொத்தமாக 32 நாடுகள் இவ் விளையாட்டுக்களை பகிஷ்கரித்துள்ளதைத் தொடர்ந்து 26 நாடுகள் மட்டுமே கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.**

விளையாட்டுக்களில் கலந்துகொள்ளும் இந்த 26 நாடுகளும் காமன்வெல்த் வெள்ளையர் இனநாடுகளாகும். இந் நாடுகளைச் சேர்ந்த 1600 வீரர்கள் இவ் விளையாட்டுக்களில் கலந்துகொள்வார்கள்.

பகிஷ்கரிப்பு நாடுகளைச் சேர்ந்த சுமார் 700 வீரர்கள் இன்றைய விளையாட்டுக்களில் கலந்துகொள்ளாமையினால் அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் மேலும் அதிக விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் அனுப்பிவைக்குமாறு பங்குபற்றும நாடுகளையும் அமைப்பாளர்கள் கேட்டுள்ளார்கள். எனினும் அதற்கான காலக்கெடு இல்லாமையினால் வேல்ஸ்மாத்திரம் கூடுதலாக பதினொருபேரை புதிதாக அனுப்பிவைத்துள்ளது.

இதேவேளை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சரை இவ் விளையாட்டுக்களில் கலந்து கொள்ளாது தடுத்து நிறுத்துவதுடன், அவருக்கு விடுக்கப்பட்ட அழைப்பை வாபஸ்பெறும் தீர்மானமொன்றை எடின்பரோ நகர கவுன்ஸில் நேற்றுமுன்தினம் அங்கீகரித்துள்ளது. இச்சபை எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ளது.

இந்த சபையின் கோரிக்கையை காமன்வெல்த் விளையாட்டு சபை நிராகரித்து விட்டதுடன் விளையாட்டுக்களை முன்னின்று நடத்தும் ஒருநாட்டின் அரசுத் தலைவரை அழைக்கவேண்டியது கடமையாகும் என்று தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க எடின்பரோ பிரதான விளையாட்டரங்கில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக பீதி ஏற்பட்டபோதும் பின்பு அது பொய் என நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ரா)

**உலகச் செய்திகள்**

---

### ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம்

# பிரிட்டனுக்கு எதிராக செயல்பட முடிவு

அடிஸ்அபாபா, ஜூலை 24

"இனவெறிபிடித்த தென்னாபிரிக்க அரசு சம்பந்தமாக பிரிட்டன் பின்பற்றிவரும் கொள்கையை கண்டிக்கும் வகையில் பிரிட்டனுக்கு எதிரான பொருளாதார ராஜ்ய துறைகளில் ஈடுபடவேண்டும்" என்று ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தைச் சேர்ந்தநாடுகளின் அமைச்சர்களின் மட்டத்திலான கூட்டமொன்று நேற்றுமுன்தினம அடிஸ்அபாபாவில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட பத்திரமொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறிட்டோரியாவுக்கு எதிரான பொருளாதார தடை குறித்து பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றும் தென்னாபிரிக்க அரசுக்கு எதிராக பிரிட்டன் பொருளாதார தடைகளை விதிக்குமாறு வற்புறுத்தும் வகையில் ஆபிரிக்க நாடுகள் எதிர்ப்புநடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இக்கூட்டத்தில் பொருளாதார, அணுசக்திதுறைகளில் தொடர்ந்து ஒத்துழைப்புக் கொண்டிருக்கும் அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜேர்மன், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு எதிராக கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

எடின்பரோ காமன்வெல்த் விளையாட்டுக்களை பல நாடுகள் பகிஷ்கரித்துள்ளமை குறித்து ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ரா)

---

# அதிருப்திதரும் சீன இந்திய பேச்சுக்கள்!

பீக்கிங், ஜூலை 24

இந்தியா, சீனு ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான எல்லை தொடர்பான ஏழாவது சுற்றுவட்டப் பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் முடிவடைந்தன.

பீகிங்கில கடந்தசிலதினங்களாக இடம்பெற்று வந்த இந்தப்பேச்சுக்களில் குறிப்பிடத்தகளவு முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது.

அருணசலப் பிரதேசப் பகுதியில சீனர்கள் ஊடுருவல் செய்வது பற்றிய விடயம் காரசாரமானமுறையில் விவாதிக்கப்பட்டதாயினும் எவ்வித உடன்பாடும் அற்றமுறையில் கூட்டம் முடிவடைந்துள்ளது.

எனினும் இவ் இரு தரப்பு பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிட்ட சீனசெய்திஏஜென்ஸி ஒழிவு மறைவு எதுவுமின்றிநட்புரீதியில் பேச்சுக்கள் முடிவடைந்துள்ளன என்றும் இருதரப்பாரும் விஷயங்களை முன்பைவிட நன்கு புரிந்து கொண்டனர் என்றும் தெரிவித்துள்ளது.

கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் பற்றிய விடயங்ளிலும் இருதரப்பாரும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்கள். (ரா)

---

# அணு ஆயுத சோதனை குறித்த அமெரிக்க — சோவியத் பேச்சுக்கள் ஆரம்பம்

மாஸ்கோ, ஜூலை 24

அணுவாயுத சோதனைகள் குறித்து அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் வெகுவிரைவில் நடைபெறவுள்ளன.

கடந்த மார்ச் மாதம் இது பற்றிய பேச்சுக்கள் நடைபெறவிருந்தது. இருப்பினும் அமெரிக்கா அணுவாயுத சோதனைத் தடுப்புக்கு முன்வராததுடன் கண்காணிப்பிலை மாத்திரமே ஏற்றிருந்தது. இதனால் இப்பேச்சுக்கள் இடம்பெறவில்லை.

மீண்டும் அமெரிக்க - சோவியத் நாடுகளுக்கிடையில் நடைபெறவுள்ள இப்பேச்சுக்களின் போது "அணு உலை வெடிப்பு சோதனைகள் கண்காணிக்கப்படல் வேண்டும்" என்று அமெரிக்காவை வற்புறுத்துவது, அதுகுறித்த சர்வதேச சட்டத்தை கருத்தில் கொண்டு அனைத்து அணு ஆயுத சோதனைகளையும் தடுத்தல்பற்றிய ஒப்பந்தம் கொண்டுவரல் சம்பந்தமான பிரேரணைகள் சோவியத் யூனியனால் கொண்டுவரப்படவுளள தாக அறிவிக்கப்பட்டது.

அணுவாயுத தடுப்பு ஒப்பந்தத்தை நில அதிர்வுகள்மூலம் ஊர்ஜிதப்படுத்தக்கூடிய சர்வதேச முறை ஒன்று அவசியம் என்றும் சோவியத் தெரிவித்துள்ளது. (ரா)

---

# இஸ்ரேலுடன் நடத்திய பேச்சுக்களில் பயன் இல்லை!

## — மொரொக்கோ மன்னர் கவலை

லண்டன், ஜூலை-24

மேற்காசிய அமைதித்தீர்வு குறித்து இஸ்ரேலுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என்று மொரொக்கோ மன்னர் ஹஸன் கவலை தெரிவித்துள்ளார்

மேற்காசிய பிரச்சினைகள் குறித்து மன்னர் ஹஸன் இஸ்ரேலிய பிரதமர் சிமோன் பெரஸுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இரண்டு நாட்கள் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தைகள் மொரொக்கோவின் ஒய்வுதளமான எப்ராசில் நடைபெற்றது.

பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தை அங்கீகரித்தல், ஆக்கிரமிக்கப்பட்ட அரபு பிரதேசத்தை விட்டு இஸ்ரேல் வெளியேறுதல் ஆகிய பிரச்னைகள் பேச்சுக்களில் இடம்பெற்றன.

பேச்சுக்கள் தோல்வியுற்றபோதும் இப்பிரச்னையில் இஸ்ரேல் நிலைகுறித்து அரபு நாடுகளுக்கு தாம் தெளிவுபடுத்தப் போவதாகவும் மன்னர் ஹஸன் கூறியுள்ளார்.

இருநாள் கூட்டம்பற்றிய அறிக்கை இன்று வெளியிடப் படுமெனக் கூறப்பட்டது. [ரா]

---

# 'தன்னம்பிக்கை உணர்வுடன் தமிழர்க்ள் உள்ளார்கள்'

## — சென்னையில் தொண்டமான்

சென்னை ஜூலை 24

"கடந்த காலங்களைப்போல் அல்லாது இலங்கைத் தமிழ் மக்கள் இன்று நன்னம்பிக்கை நிறைந்தவர்களாக உள்ளார்கள்" என்று கிராமிய தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

இலங்கை - இந்திய வர்த்தக சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் சிறப்பு பிரதிநிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் தொண்டமான் இவ்வாறு கூறினார்.

1958-ம் ஆண்டிலிருந்து தமிழர்கள் பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். இருப்பினும் தமிழர்கள் மாத்திரம் அகதிகளாக மாறும் நிலைமைமாறி சிங்களவரும் இன்று அகதிகளாக மாறும் நிலைமை உருவாகியுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். [நீ-க]

---

### கிளிநொச்சியில்

# அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த மாதம் கிளிநொச்சிப் பகுதியில் ஏற்பட்டஅனர்த்தங்கள் மத்தியில் ப. நோ. கூ. சங்கங்கள் கஸ்டப்படும் மக்களுக்கு அரிசி சீனி, மா போன்ற உணவுப்பொருட்களை மிக்க சிரமத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்து விநியோகம் செய்தன.

ஆனல் இன்றுயாழ்ப்பாணத்திலிருந்து சீனி, மா ஆகியவற்றை கொள்வனவு செய்ய முடியாதென்றும் வவுனியா உணவுக்களஞ்சியத்திலிருந்து கொள்வனவு செய்யுமாறும் ப. நோ கூ. சங்கங்கள் பணிக்கப்பட்டுள்ளன. ஆனல் வவனியாவுக்குச் சென்ற சங்கலொறிகளிடம் சீனி, மா அங்கு இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கப் பிரதிநிதிகள் வவனியா அரசாங்க அதிபர் திரு. லோகேஸ்வரன் அவர்களிடம் சென்று முறையிட்டுள்ளனர். அவர் யாழ்ப்பாணத்தில் உணவுக்களஞ்சியத்தில் பொருட்கள் பெற உதவுமாறு கிளிநொச்சிஇராணுவ அதிகாரிக்கு சிபார்சு பண்ணியிருந்தார். சங்கத்தலைவர்கள் இராணுவ முகாமுக்குச் சென்றபோது அவர்கள் அநுராதபுரம் சென்று கொள்வனவுசெய்யும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

சங்கப்பிரதிநிதிகள் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எம். எஸ். தருமலிங்கத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் கிளிநொச்சி இராணுவ அதிகாரியவர்களுடன் தொடர்பு கொண்டபோது, தாம் தமது மேலிடத்துடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் பதில் வந்தபின் ஏற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

உரியநடவடிக்கைகள் அவசரமாக எடுக்கப்படாவிடின் மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சீனி, மா போன்றவற்றை விநியோகம் செய்வதில் மிகவும் சிரமம் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## நாளை "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்"

யாழ்ப்பாணம், வெள்ளி

கிராமியக் கலைக்குழுவினரின் "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" நாடகம்நாளை சனிக்கிழமை மாலை ஊரெழு கணேசா வித்தியாலயத்தில மேடையேற்றப்படவுள்ளது.

தொடர்ந்து இந்நாடகம் ஞாயிறு மாலை அச்சுவேலி மகாவித்தியாலயத்தில்மேடையேற்றப்படும்.

---

## கசிப்பு, சாராயம் பிடிபட்டது

காரைநகர், வியாழன்

கடந்த திங்களன்று காரைநகரின் முக்கிய இடங்களில் திடீர்த் தேடுதலை நடத்திய இளைஞர் கோஷ்டி ஒன்று சுமார் இருபத்தி ஐயாயிரம் ரூபா பெறுமதியான கசிப்பு, சாராயம், பனம் சாராயத்தினை கைப்பற்றி விற்றவர்களுக்கு முன்னிலையில் நிலத்தில் கொட்டினர். சில மாதங்களுக்கு முன்னர் காரைநகரில் சாராயம், கசிப்பு விற்கவேண்டாமென இளைஞர்கள் எச்சரித்து துண்டுப்பிரசுரம் விநியோகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

Rice & Curry

TAKE AWAY PARCELS

Veg, Fish, Beef Mutton, Chicken
Good Food
Competitive Rates

OLD PARK CHINESE RESTAURANT
207 Old Park Rd,
Jaffna. Tel: 23028
A 956

### மணிவாக்கு

எவன் ஒருவன் தனது நாட்டுக்கு நன்ருகப் பணி செய்கின்ருனே அவன் தான் சார்ந்துள்ள கட்சிக்குப் சிறந்த பணிபுரிந்தவனுவான்.
— ரூத்தர்போர்ட் பிஹேயஸ்

# நமது நோக்கு

## அன்றைய நினைவுகள்

இலங்கை நாட்டின் வரலாற்றில் மிகக் கறை படிந்த ஒருகாலம் ஜூலைத் திங்களாகும். இன்று மூன்ருண்டுகளின் பின்னரும்கூட அந்த மாதத்தின் நிகழ்வுகளை எண்ணிப்பார்க்கையில் மனம் துணுக்குறுகின்றது.

நாடு முழுவதுமே தமிழர்கள் எங்கெங்கு வாழ்ந்தார்களோ அங்கங்கெல்லாம் வன்செயல்கள் வெடித்தன. இந்தநாட்டின் அரசியல் பற்றி எதுவுமே அறியாத அன்ருடம் கூலிவேலைசெய்து பிழைத்த அப்பாவிகள்கூட தாக்கப்பட்டனர், கொள்ளையடிக்கப்பட்டனர்; கொலை செய்யப்பட்டனர். உயிருக்குத் தப்பிஓடிய சிறு குழந்தைகளுங் கூட கொழுந்து விட்டெரியும் தீக்குழம்புக்குள் தூக்கி எறியப்பட்டன.

இவ்வளவுக்கும் அவர்கள் தமிழர்களாய் பிறந்துவிட்டதே காரணம்!

சுதந்திரம் கிடைக்கும் வரை ஒரே குடும்பத்தின் இரு சகோதரர்களாக விளங்கிய இரண்டு இனங்கள் சுதந்திரம் கிடைத்ததின்பின் நீ வேறு நான் வேறு என்றநிலைக்கு ஏன் தள்ளப்பட்டன?

சிங்களவர்களும், அவர்களின் அரசியல் கட்சிகளும் தமது தேசிய பெரும்பான்மை என்றநிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சிறுபான்மையினரின் உரிமைகளையெல்லாம் படிப்படியாகப் பறிக்கத் தலைப்பட்டமை; சகலதுறைகளிலும் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டமை; இதற்காக பல்வேறு சட்டவாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டமை; மேலும், தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வதியும் பிரதேசங்களில் படைகளின் துணையுடன் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை உருவாக்கியமை போன்றவையும் இன்னும் பலவும் மேற்படி நிலைமைக்கு காரணங்காட்டப்படலாம். இதைவிட தமிழ் மக்கள் தங்களுக்கிடையில் சரியான ஒற்றுமையுடன் செயல்படாது போனமையும், மலைநாட்டவர், கிழக்கிலங்கையர், யாழ்ப்பாணத்தவர் என்ற பிரிவுமனப்பான்மை தலைதூக்கியிருந்தமையும் இன்னொரு முக்கிய காரணம் என்க. சிங்களத் தலைவர்களில் அபரிமிதமாக நம்பிக்கை வைத்தமையும் ஒருகாரணம்

தமிழர்கள் பிரிவுபட்டுக் கிடந்த நிலையை பெரும்பான்மை அரசியல் வாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முடிந்தது.

சிங்களப் பெரும்பான்மைத் தலைவர்கள் அன்று பின்னுல் ஏற்படக்கூடிய விளைவுகளைப்பற்றிச் சிந்தித்து நடந்திருப்பார்களானுல், அதற்கேற்ப நாட்டு மக்களையும் தயார் செய்திருப்பார்கள். சிங்களவர் மத்தியில் தமிழ்த் துவேஷம் இன்றைய நிலைக்கு வளர்ந்திருக்கவும்மாட்டாது

தமிழர்களும் பின்விளைவுகளை எண்ணிச் செயல்பட்டிருப்பின் தமிழரின் உரிமைகள் இந்த அளவுக்கு பறிபோயிருக்க மாட்டாது.

இன்றும்கூட பழைய பிரிவு மனப்பான்மையே பல விடயங்களில் தலைதூக்குவதைப் பார்க்கநேர்கின்றது. இது நிச்சயமாக தமிழர் சமுதாயத்துக்கு நன்மையாக முடியாது.

இனவெறியர்களின் ஈவிரக்கமற்ற கொடுமைக்குள்ளாகி பலியான தமிழ் மக்களைமட்டும் இந்த ஜூலை மாதம் நினைவுறுத்தவில்லை. சகல உயிர்களும் ஒன்றென உபதேசித்த புத்தபெருமானைப் பின்பற்றுவசாகக் கூறுபர்சள் இனவெறிக்குள்ளாகி எவ்வளவு தூரம் இழிவாக நடந்துகொண்டார்கள் என்பதையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் மாதமாகத் திகழ்கின்றது.

விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டிருந்த 53 தமிழர்களை இனவெறியர்கள் துடிக்கத் துடிக்க கொன்றொழித்த கரிநாளாகவும் இதுவிளங்குகின்றது.

1983 ஜூலை கலவரத்தையும் வெலிக்கடைச் சிறையில் 53 தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டதையும் நினைவுகூரும் தமிழ் மக்கள் எதிர்காலச் சந்ததியினரின் சுதந்திரமும் சுபிட்சமுமிக்க சுகவாழ்வுக்கு வழிசமைத்திட உறுதிகொள்ளவேண்டியவர்களாகவும் இன்று இருக்கிருர்கள்.

## முறைசாராக் கல்விபூர்த்தி

காரைநகர், வியாழன்

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்தியமகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வியை நிறைவு செய்தவர்கட்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இக்கல்வியைப் பூர்த்தி செய்து தொழில் தொடங்கும் பதின்மூன்று பெண்களுக்கு அதிபர் திரு. எஸ். பத்மநாதனின் பொர்சுக்கமைய காரைநகர் பல நோக்கு கூட்டுறவு சங்க கிராமியவங்கியின் அனுசரணையுடன் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

## மண்டலாபிஷேக பூர்த்திவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா நாளை சனிக்கிழமை காலை 7 மணிமுதல் நடைபெறவுள்ளது அன்றைய தினம் சங்காபிஷேகமும் தண்டிகைஉற்சவம்-மாசேசுரபூசை என்பனவும் சிறப்பாகநடைபெறும்.

### 125-வது ஆண்டு நிறைவு:

# குருகுலக் கொடி பறக்கும் புனித சந்தியோகுமையோர் ஆலயம்

1961ம் ஆண்டில்தமது 100வது ஆண்டின் நிறைவினைக் கொண்டாடி மகிழ்ந்தயாழ்ப்பாணம் குருநகர் புனிதயாகப்பர் பங்கினைச் சேர்ந்த மக்கள் இன்று தமது ஆலயத்தின் 125 வது ஆண்டினை பூர்த்தி செய்யும் விழாவினைமிக அமைதியாக பக்தி விமரிசையுடன் கொண்டாடப்படும் இக்காலத்தில் ஆலயத்தின் வரலாற்றை ஈண்டு நினைவுகூருதல் பொருத்தமானதே.

'யாழ்ப்பாணத்திலே சித்திரங்கள் வரைவதில் திறமை வாய்ந்து ஐரோப்பியர்களாலும் பாராட்டப்பட்டவருள் மேஸ்திரி சந்தியோகு ஒருவராவர். இவர் குருநகர் வாசியும் சந்தியோகு அப்போஸ்தலர் பங்கைச் சேர்ந்தவருமாவர். இவரால் இயற்றப்பட்டசந்தியோகுமையோர் ஆலயத்தின் தூபி வியப்பிற்குரியது.''
(யோண் H. மாட்டீன்—யாழ்ப்பாணத்தைப் பற்றிய குறிப்புகள்)

இத்தகைய சிறப்பினைக் கொண்ட சித்திர விசித்திர வேலைப்பாடுகளுடன் யாழ்ப்பாண மாநகர மத்தியிலே கம்பீரமாய் ரோமபுரியிலுள்ள பேதுருவானவர் பேராலயத்திலுள்ளது போன்ற தூபி மாடத்தைக் கொண்டு யாழ்ப்பாணச் குடா நாட்டிற்கே அலங்காரத் தீபமாய் சந்தியோகுமையோர் ஆலயம்காட்சியளித்துக்கொண்டு இருக்கின்றது.

### பங்குமக்கள்

இவ்வாலயத்தைச் சேர்ந்த பங்குமக்கள் குருகுல மக்கள் என அழைக்கப்படுவர். யாழ்ப்பாண இராச்சியத்தின் பாதுகாப்பைக்கருதி சிங்கஆரியன் எனப்பட்ட அரசரின் ஆட்சியின்போது அவரது அழைப்பின்பேரில் சோழ நாட்டிலிருந்து யாழ்நகர குருகுல மக்கள் தமது தலைவரும் இராசகுமாரருமான ''வீரசிங்கன்குருகுலநாட்டுத்தேவன்'' என்பவரின் தலைமையின் கீழ் போர்வீரர்களாய் இங்குவந்து குடியேறியவராவர் இவர்களுடன் தென் இந்தியாவிலிருந்து தமது ஊழியருடனும் குடிமக்களுடனும் யாழ்ப்பாணத்திலே குடிபுகுந்தனர்.

யாழ்ப்பாணப்பட்டினத்தின் மேற்குப் பகுதியிலே குடியேற்றப்பட்ட இவர்கள் தமது பூர்வீகபெயரான ''குருநாடு'' என்பதை நினைவுகூர தாம் குடியேறிய ஊருக்கு குருவூர் எனக் சூட்டினர். அது பின்னர் கரையூராகி தற்பொழுது குருநகர் என விளங்குகின்றது.

போர்த்துக்கீசரின் படையெடுப்பின்போது அவர்களை வன்மையாக எதிர்த்தவர்கள் இவர்களே அக்காலத்தில் போர்த்துக்கேசரால் பாவிக்கப்பட்ட நவீன ஆயுதங்களுக்கு எதிரே இவர்களால் பாவிக்கப்பட்ட பண்டைக்கால ஆயுதங்கள் எம்மாத்திரம். குஎரோஸ் என்ற போர்த்துக்கீச சரித்திர ஆசிரியர் இவர்களைக் கும்பிடுகையில் இவ்விராச்சியத்தில் மிகவும் யுத்த ஓர்மம்படைத்தவர்கள் என வர்ணிக்கிருர்.

ஆதியிலே சைவ சமயத்தவர்களாய் இருந்த இம்மக்கள் யாழ்ப்பாணத்திலே 1617ம் ஆண்டில் போர்த்துக்கீசரின் கொடி நாட்டப்பட்டு 1619ம் ஆண்டில் ட்லிப் டி. ஒல்வேபட தேசாதிபதியாக வந்தபின்னர் 1624ம் ஆண்டிலே கத்தோலிக்கராயினர். 1624ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ம் திகதி கோட்டையிலுள்ள புதுமை மாதா கோவிலில் அரசபரம்பரையைச் சேர்ந்த பலருடன் ஞானதீட்சைபெற்றனர். ஒல்லாந்தரின் ஆட்சியின்போது பலகொடுமைகளுக்கு ஆளான இம்மக்கள் தமது கத்தோலிக்க சமயத்தில் விசுவாசமுள்ளவர்களாய்த் திகழ்ந்தனர். 1796ம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் ஒல்லாந்தரின் ஆட்சியில் கத்தோலிக்கருக்கு ஏற்பட்ட கொடுமைகளை நீக்குவதற்கான சட்டங்களை இயற்றி நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டினர்.

### ஆரம்பம்

1624 ம் ஆண்டில் கத்தோலிக்கரான இப்பங்கு மக்கள் போத்துக்கீசர் காலத்தில் பகிரங்கமாக சிற்ருலயங்களை அமைத்து வழிபட்டனர். இதே போன்று தற்போது இருக்கும் ஆலயம் இருந்த அதே இடத்தில் ஒரு சிறு ஆலயம் இருந்தும், அது அகற்றப்பட்டு தற்போதைய ஆலயம் அமைக்கப்பட்டலாயிற்று. சிற்ருலயம் இருந்தமையை ஆலயத்தின் உள்ளே நடுவில் இருக்கும் கல்வெட்டு சான்று பகருகின்றது. இக்கல்வெட்டில் வண. பிதா யோசவ்ரெபெய்ரோ அவர்களின் பூதவுடல் 1-11-1783 -ல் அடக்கம் செய்யப்பட்டதற்கு சான்ருக விளங்குவதுடன் இவ்வடிகளாருக்கு 1894, ம் ஆண்டுவரை அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான துக்கப் பூசை ஒப்புக்கொடுப்பட்டதற்கான ஆதாரமும் உள்ளது. பல கலையம்சங்களை உள்ளடக்கிய தற்போதைய சந்தியோகுமையோர் ஆலயத்துக்கான வரைபடத்தைத் தாமே வரைந்து அதற்கான அத்திவாரக்கல்லை 1861 -ம் ஆண்டு ஆடி மாதம் இருபத்தைநதாம் திகதி(புனிதரின் திருநாளன்று) நாட்டியவர் பிரான்ஸ் தேசத்தைக் சேர்ந்தவரும் இவ்வாலயத்தில் கட்டளைக் குரவராய் திகழ்ந்த அதி வண. பிதா. எல். சி. எச். மொறு ஆ ஓ. எம். ஐ. ஆவர். 25-7-1861 -ல் அத்திவாரக்கல் நாட்டப்பட்ட வேபட ட இத்தோரவைப் சுவாமியவர்களின் கண்காணிப்பிலும் மேஸ்ரி சந்தியோகு அவர்களின் வேலைத்திறமை மிக்க மேற்பார்வையிலும் இப்பங்கு மக்கள் கொடுத்த பேராதரவினுலும் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டது.

### நூற்றுண்டு நினைவின் போது

1961 ம் ஆண்டில் ஆலயத்தின் 100 வது ஆண்டு பூர்த்தி செய்தபோது ஒரு நூற்ருண்டு நினைவுமலர் நூற்ருண்டு விழாக் கொண்டாட்டத் தொண்டர் இயக்கப்பதிப்புக் குழுவினரால் குருநகரின் புராதன சரிதையையும், ஆலயத்தின் வரலாற்றையும் புனிதரின் வரலாற்றின் சுருக்கத்தையும் உள்ளடக்கி சிறப்பாக வெளியிடப்பட்டது.

இவ்விழாவினையொட்டி ஆலயம் ஒரு புதிய சற்பிரசாத பேழையையும், பூசைப்பாத்திரம், பூசை உடுப்புகள், பூசைப் பரிசாரருக்கான உடுப்புகள், மொழுகுவர்த்திக் கத்திசால், தூபி (டோம்) குருசுக்கு மின் விளக்குப் போன்ற பலவற்றையும் இப்பங்கு மக்களின் அன்பளிப்பாக பெற்றுக் கொண்டது. விழாவினையொட்டி மேஸ்திரி மனுவேற்பிள்ளை அவர்களின் மேற்பார்வையில் பல திருத்தவேலைகளும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாலயத்தின் உள்ளும் புறமும் பல சிற்பவேலைப்பாடுகள் பொதிந்து காட்சியளிக்கின்றன. தூபிமாடத்தின் உச்சியிலே மனுக்குல மீட்சியின் சின்னமான திருச்சிலுவை விண்ணை நோக்கிய வண்ணம் காட்சியளிக்கின்றது. தூபி மாடத்தின் உச்சியிலே நின்று பார்த்தால் யாழ் நகரத்தின் இயற்கைஎழிலை எளிதில்கண்டு நுகரக்கூடியதாகவிருக்கின்றது. தூபிமாடத்தின் பின்னும் இருபக்க முக்கோணங்களிலும் சுரூபங்கள் அமைக்கப்பட்டிருக்கும் முறை அனைவரையும் கவரக்கூடியதாகவிருக்கின்றது.

ஆலயத்தின் எப்பக்கம்திரும்பினும் சிறந்த சிற்பவேலைப்பாடுகள் உள்ள சுவர்களையும்; தூண்கள், லிஸ்டர் போன்றவற்றையும் காணக்கூடிததாகவிருக்கின்ற இவ்வாலயம் 125 வது ஆண்டு நினைவினையொட்

(5ம் பக்கம் பார்க்க)



''பொங்குவள யாழ்ப்பாண மாநகர மத்தியிலே

தங்குகொடுமுடிபோற் காட்சிதரும்-வங்கிஷத்தோன்

சந்தியோகு ஆலயத்தின் சார்ந்த நூறுனவருஷ

சந்திவிழா என்றே களி!''

# "தோழர்கள் விட்டுச்சென்ற புனித பயணத்தை தொடர்வோம்" — புளொட்

யாழ்ப்பாணம், வெள்ளி

"எம்மவர்கள் சிந்திய குருதி எமது மக்களின் விடுதலைக்காக என்பதில் உறுதியாய் இருந்து நமது தேச முரண்பாடுகளைப் பேசித் தீர்த்து எதிரியுடனான பகை முரண்பாட்டை மட்டுமே ஆயுதத்தால் தீர்ப்போம் என உறுதி கூறி தோழர்களும், மக்களும் சிந்திய குருதியூடாக எங்களுக்கு விட்டுச்சென்ற புனித பயணத்தைத் தொடர்வோம்."

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் 83 ஜூலை வெலிக்கடைச் சிறையிலும் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசம் எங்கெனும் நிகழ்த்தப்பட்ட படுகொலையானது எமது போராட்டத்தை புதியதோர் சூழ்நிலைக்கு இட்டுச்சென்றது

எமது போராட்டத்தை வெற்றிவரையிட்டுச் செல்வதற்காக ஜூலை 25ம் திகதியான இன்றைய தினத்தை எதிர்ப்புத் தினமாகப் பிரகடனம் செய்து, எமது அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்திப் போராளிகளதும் மக்களதும் குருதியால் புடம் போட்ட எம் மண்ணை நாமே மீட்போம். இவ் எதிர்ப்புத் தினத்தில் அனைத்து மக்களும் இணைந்து கொண்டு எதிரியுடன் போராடுவோம்."

## கிரிக்கெட் :-

# இன்று சாம்பியன் மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்று வந்த கிரிக்கெட் போட்டியில் 17 வயதுப் பிரிவினரின் சாம்பியன் பட்டத்திற்கான மோதல் இன்றும் நாளையும் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச் சாம்பியன் பட்டத்திற்கான மோதலில் யாழ். இந்துக் கல்லூரியும், சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதுகின்றன. [வி]


## கடைசிநேர வரிவிளம்பரம்

### வாடகைக்கு

கீழ்க் காணும் விலாசத்தில் கடை நடத்துவதற்குரிய அறை ஒன்று வாடகைக்கு விடப்பட உள்ளது. மேலும் விபரங்கட்கு 19 மணிக் கூட்டுவீதி, யாழ்ப்பாணம். [C-3770]

### தேவை

பாவிக்கக்கூடிய நிலையிலுள்ள 'சீலிங் மின் விசிறிகள் (Celing Fans) உடன் தேவை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: விளம்பர இலக்கம் A-958, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். [A-958]

**லிடோ**

காலை 10-30, 2-30, 6-30

பாக்கியராஜ்-சரிதா நடித்த

**மௌனகீதங்கள்**

(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**

வெண்திரையில்

10-30, 2-30, 6-30

இனிய பாடல்கள் அதிபயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த

சிவாஜி, ஜமுனா வீரப்பா, நம்பியார்

**தங்கமலை ரகசியம்**

[புத்தம் புதிய பிரதி] இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.


## இலங்கையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்திய ஒத்துழைப்பு நாடுகள் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் சாக் ஸ்தாபனத்தின் அங்கத்துவ நாடுகளுக்கிடையேயான நல்லுறவு பற்றி இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். [சிவ]

## முகாம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களுக்குமட்டுமே நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நிவாரண உதவியாக வழங்கப்பட்ட பொருட்களும் மேற்படி பிரஜைகள் குழுவினால் சேகரிக்கப்பட்டவையாகும்.

முற்றாக வீடுகளை இழந்து பாதிப்புக்குள்ளாகியுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காக யாழ். அரச அதிபருடன் பல தடவைகள் தொடர்பு கொண்டிருந்த போதிலும் இதுவரை யாதொரு அரச உதவிகளும் வழங்கப்படவில்லையெனப் பிரஜைகள் குழுப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.


## மின் தடை

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-07-27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் 33 K.V. மின்பாதையில் அவசர திருத்த வேலைகள் செய்யஇருப்பதனால் காலை 8.00 மணிமுதல் 4.00மணி வரை யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உபமின நிலையங்களுக்கும் கோண்டாவில், கொக்குவில், கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்

இம் மின் தடையால் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்

யாழ். பிரதேசஅலுவலகம்,
இலங்கை மின்சார சபை.
சுன்னாகம். [A955]


## தமிழ்ப் பகுதிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட சாதாரண தமிழ்க் குடிமக்கள் சொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 2000க்குமேற்பட்டவர்கள் குடும்பத் தலைவர்கள். கைது செய்யப்பட்டவர் பல்லாயிரம். வீடெரிப்புகள், சூறையாடல்கள், கற்பழிப்புகள் தொடர்கின்றன.

இன்று நடக்கும் எதிர்ப்புக் கூட்டங்களிற் பங்குபற்றி எதிர்ப்புத் தினத்தை வெற்றியடையச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

இதன்மூலம் அரச பயங்கரவாதத்தை அனைத்துலக நாடுகள் முன்னும் அம்பலமாக்குவதுடன் அடக்குமுறைக்கு எதிரான மக்கள் போராட்டத்தையும் வலுப்பெறச் செய்வோம்.

## குருகுலக்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

டிப் பெறும் மெருகூட்டல் மூலம் மேலும் சிறப்பைப் பெற்று யாழ்ப்பாணத்தில் மட்டுமில்லாது, இலங்கையிலும் சிறந்ததேவாலயங்களுள் ஒன்றாகத் திகழும் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

### பங்கின்சிறப்பு

இப்பங்குமக்கள் தமக்கென வரலாறுமிக்க தனித்துவமான ஒரு கொடியைக்கொண்டுள்ளவர்கள். அதுமகக்கொடியென அழைக்கப்படும். இது பற்றிய விளக்கம் நூற்றாண்டு நினைவு மலரிலுண்டு. இவர்கள் கத்தோலிக்க மதத்தைத்தழுவிய பின்னர் இவர்களால் உபயோகிக்கப்பட்ட கொடி குருகுலக் கொடியென அழைக்கப்பட்டது. இப்பங்குமக்கள் இடைப்பட்ட காலத்திலேயே தாம் பொழுது போக்கிற்காகக் கற்றுகொண்ட கடற் தொழிலை தங்கள் சீவியத்துக்கு உயிர் ஊட்டும் தொழிலாகக் கைக்கொண்டனர் தமக்குப் பாதுகாவலரான யேசுநாதரின் அப்போஸ்தலர்களுள் ஒருவரும் மீன்பிடித் தொழிலைச் செய்தவருமான சந்தியோகுமையோரைத் தெரிந்துகொண்டனர்.

எனவே தமதுதொழிலுக்கும் தமக்கும் பாதுகாவலராகத் தெரிந்து கொண்ட புனிதரின் பெயரில் இப்பிரமாண்டமான ஆலயத்தை அமைத்தனர்.

ஒருகாலத்தில் யாழ்ப்பாண அரசர்களின் மெய்க்காப்பாளராகத் திகழ்ந்த இப்பங்கு மக்கள் திருச்சபையின் மெய்காப்பாளர்களாக மட்டுமல்ல அடக்கப்பட்ட மக்களின் காப்பாளராகவும் திகழபுனிதயாகப்பர் இவர்களுக்கு பாதுகாப்பாக இருந்து வழிநடத்த வழி வகுப்பாராக.

இப்பங்கு மக்கள் இவ்வாலயத்தின் பல நூற்றாண்டுகளைக் காண்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

[புனிதயாகப்பர் ஆலய 125-வது ஆண்டு நினைவு மலரிலிருந்து]

## காங்கேசனில் அரிசிக் கப்பல்

யாழ்ப்பாணம், வெள்ளி

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு அரிசி, சீனி, மா முதலிய அத்தியாவசிய உணவுப் பொருட்களுடன் இரு கப்பல்கள் வந்துள்ளன. [சிவ]

# "இனப்படுகொலைக்கெதிரான நடவடிக்கையில் அனைத்து மக்களும் பங்குபற்றவும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஜூலை இனப் படுகொலையின் மூன்றாண்டு நிறைவை ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாய் நினைவு கூரும் இந் நாளில் எமது போராட்டத்தில் அதன் சாதக, பாதக அம்சங்களை கவனத்தில் எடுத்து எமது வருங்காலப் பயணத்திற்கு இவ் அனுபவங்களை துணையாக்கிக் கொள்ள வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்." என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவ்வகையில் இன்றைய தினத்தில் ஈழ மக்களும் அம்மக்களைப் பலவழிகளிலும் உள்வாங்கியிருக்கும் வெகுஜன ஸ்தாபனங்கள், தொழிற் சங்கங்கள் அவற்றின் கூட்டுக் குழுக்கள் போன்ற அனைத்து வகைப்பட்ட இனப்படுகொலைகளுக்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈழ மக்கள் அனைவரையும் பங்கேற்குமாறு வேண்டுகிறோம்

83 ஜூலை இனப் படுகொலையில் சூட்டிய இளம் இரத்தங்களின் கடந்தகாலச் செயற்பாடுகள் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியவை என்பது இந்நாளில் அனைத்து விடுதலை அமைப்புகளுக்குமான காலத்தின் கட்டளை. [து]

## திருமலையில் ஹர்த்தால் சுவரொட்டிகள்

மூதூர் வியாழன்

83 ஜூலை படுகொலைகளைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத்தில் இன்று முழுமையாக ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி சுவரொட்டிகள் மூலம் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. [மா]

## கூட்டணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தைப் பரவலாக்கல், காணி குடியேற்றம், சட்டம், ஒழுங்குபோன்ற பல்வேறு அம்சங்கள் சட்டபூர்வமான முறையில் எவ்விதம் அமுலாக்கப்பட வேண்டும் என்று இருதரப்பினரும் ஆராய்ந்தனர்.

த.வி கூட்டணியினர் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக இந்திய அரசுடன் கலந்தாலோசித்த பின்னர் மீண்டும் ஆகஸ்ட் நடுப்பகுதியில் இலங்கைவந்து பேச்சுவார்த்தை நடத்துவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (சிவ)

## முல்லைத்தீவிலிருந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் கிராமத்தைச் சென்றடைந்தன. அங்கு கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களிடம் காணாமல்போன படகுபற்றிவிசாரித்தபொழுது ஒருபடகை கடற்படையினர் கைப்பற்றிச்சென்றதாகத்தெரிவித்தனராம்,

மீண்டும் திருமலைக் கரையடைந்த இரு படகுகளிலிருந்தவர்கள் பிரஜைகள் குழுவுக்கு இதுபற்றி முறையிட்டதைத் தொடர்ந்து பிரஜைகள் குழு இணைப்பதிகாரியிடம் புகார் செய்துள்ளது.

காணாமல்போன அப்படகில் 25க்குமேற்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் இருந்திருக்கலாமென நம்பப்படுகிறது

திருமலையில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் காரணமாகக் குடிபெயர்ந்து அகதிகளாக முல்லைத்தீவில் அகதிகள் முகாம்களில் தங்கியிருந்தவர்களே இப்படகுகளில் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது [மா]

## முல்லைத்தீவு கிளிநொச்சியில் இன்று ஹர்த்தால்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைகளுக்கு எதிர்ப்பு நாளாகவும், 83 வெலிக்கடைப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவும் இன்று கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

## பாதுகாப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புநோக்கிச் சென்ற சகல வாகனங்களும் வவுனியாவுக்கு இப்பால்வைத்துத் திருப்பிவிடப்பட்டதாகவும் தனியார் பஸ்கள் உட்பட சிலவாகனங்கள் பாதுகாப்பான இடங்களில் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [யா]

## ஐந்து---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

றியாட்- மன்புஃவா கதீம் என்னும் இடத்தில அல், மசினு பகுதியில் இருக்கும் கம்பனியில் பணியாற்றும் உடுப்பிட்டி, கவெட்டி, பொலிகண்டி, கோப்பாய், இணுவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஐவருக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

றியட்டில் இருந்து 85கி மீ. தூரத்தில் அல் ஹாஜ் என்னும் இடத்தில் இருக்கும் கலதியா சிறைச்சாலையில் சுத்திகரிப்பு வேலையில் ஈடுபட்டு வந்த பிரஸ்தாப ஐவரும் எட்டு மணித்தியால வேலையில் மேலதிக நேர சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததுடன், மேலதிக சம்பளம் வழங்கப்படாவிடில் இந்த சிறைச்சாலையில் வேலை செய்ய மாட்டோம் என்றும் கம்பனிக்கு அறிவித் திருந்தார்கள்

இதனைத் தொடர்ந்து எட்டு மணித்தியால வேலையில் மேலதிக சம்பளம் எதுவும் வழங்கப்படமாட்டாது என்று கம்பனி அறிவித்ததுடன் "தொடர்ந்தும் பிரச்னையை ஏற்படுத்த முயன்றால் எமது செலவிலேயே நாட்டுக்குப் போவதற்கு தயாராக உள்ளோம்" என்ற புதிய ஒப்பந்தப் படிவத்திலும் இவர்களிடம் இருந்து கையெழுத்தும் கம்பனி வாங்கி இருப்பதுடன் ஐவரையும் கஷ்டமான வேலைக்கும் அனுப்பி வைத்துள்ளது

இச் சம்பவம் பிரஸ்தாப கம்பனியில் பணியாற்றும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.


## பிரயாண ஒழுங்கு

எம்மிடம் லிபியா பிரயாண ஒழுங்குக்கு பதியப்பட்டவர்களும் உடன் லிபியா பிரயாணம் மேற்கொள்பவர்களும உடன் தொடர்பு கொள்ளவும்.

### யூனிவேசல் ஏஜென்சிஸ்

பெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[ஆயுள்வேதக் கல்லூரிக்கு அருகாமை] (A101²

# மாமடுவை மரணங்கள் கொலை எனத் தீர்ப்பு

வவனியா, வியாழன்

மாமடுவையில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தின் போது ஸ்தலத்திலேகொல்லப் பட்ட 23 பேரின் சடலங்களும் நேற்று அவ்விடத்தில் வைத்தே பிரேதபரிசோதனை செய்யப்பட்டுமரணவிசாரணை நடைபெற்றது.

வவனியா மாவட்டத்திலுள்ள திரப்பமடுவிலிருந்து நேற்று முன்தினம் மாமடுவ நோக்கிச்சென்ற வ. பி. போ. சபைபஸ் தரைக்கண்ணி வெடியில் சிக்கியதால் ஸ்தலத்தில் 23 பேர் கொல்லப்பட்டதம் மேலும் 10 பேர் ஆஸ்பத்திரியில மரணமானதும், பலர் படுகாய முற்றதும் தெரிந்ததே.

வவனியா டிப்போவுக்குச் சொந்தமான இந்தபஸ் சேதமடைந்ததால் 3 லட்சம் நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரணவிசாரணை நடத்தியபதில் நீதவான் ஆ. வி. வில்வராசா, கொலை எனத்தீர்பளித்தார்.

கண்ணிவெடிக்கிலக்கான இப்பஸ்ஸில் சிவிலுடை தரித்தவர்கள் உட்படசுமார் 70 பேர் பிரயாணம் செய்தனராம். [மா]

## தற்கொலை

சாவகச்சேரி, வியா.

கைதடி வடக்கு திருமதிநாகலட்சுமி [வயது 60] எனபவர் தோட்டவயலில் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொணடதாகக்கூறப்படுகிறது.

குடும்பப் பாரம் காரணமாக இப்பெண்மணி தறகொலை செய்து கொண்டார என அறியப்படுகின்றது.

## ஓய்வுபெறுகிறுர்



கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் மூன்றையும் தமது குறிக்கோளாகக் கொண்டு, கடந்த முப்பத்தைந்து வருடங்களாக உதவி ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் கடமையாற்றிய திருவாளர் வ. செல்லத்துரை (V.S) அவர்கள் தமதுஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெறுகிறுர்.

1951 தை மாதம் கொழும்பு நகரிலுள்ள டாருசலாம் மகா வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகப் பணிபுரிய ஆரம்பித்து 1967 மார்கழிவரையும் அங்கு அரும்பணியாற்றியுள்ளார்.

1968 தை மாதம் இடமாற்றம் பெற்று யாழ் நீர்வேலி அத்தியார் கல்லூரியில் உதவி ஆசிரியராகவும், உதவி அதிபராகவுமிருந்து கல்லூரிவளர்ச்சிக்காக இன்றுவரை அரும் பணியாற்றி வந்துள்ளார் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுக வாழுகின்ற அன்னுர் கணிதத துறையில் விசேட பயிறசி பெறறவர் தமது அறிவு ஆற்றல் அனைத்தையும் மாணவர்களுக்காக அர்ப்பணித்தவர். கணிதத்தை வேம்பெனக்கருதும் மாணவருள்ளத்தில் அதனை தேனெனப் பாய்ச்சி இலகுவில் விளங்கிக் கொள்ளும ஆற்றலைப் புகுத்தியவர். பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கணிதத்துறையில் ஆற்றல்மிக்க ஆளுமை கொண்டவர்களாக உருவாககியமை பெருமைககுரியது.

மாணவர்களுக்கு நல்லாசாணுகவும் ஆசிரியர்களுக்கு உறற நண்பனுகவும் அதிபருக்கு அருந்துணைவனுகவும விளங்கிய அப்பெருந்தகை நம் மத்தியிலிருந்து விலகி இளைப்பாறுவது கல்லூரிக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பு என்பதை யாருமேமறுக்கவோ மறைக்கவோ முடியாது.

மக்கள் தொண்டனுன அன்னுர் இன்னும் நீண்ட காலம் தேகாரோக்கியத்துடன் அப்பணிகளை மேற்கொள்ள எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானுக.

த. இராசரத்தினம்
சக ஆசிரியன்.

# இன்றைய பலன்

மாதம் — ஆடி
திகதி— 9 [1986 - 7 - 25]
கிழமை— வெள்ளி
திதி—சதுர்த்திமு ப. வரை
நக்ஷத்திரம்— பூரட்டாதி பி இ. வரை

மேடம்-: பேச்சு வன்மையினுல் பெரும் புகழ் கிடைக்கும். பெரிய இடத்துசகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும்

இடபம்:- அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு மௌனம் நன்று.

மிதுனம்:- மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான தனம் வாகனச் சாரதிகள் இன்று அவதானம் அன்னை வழி ஆதரவும் உண்டு.

கடகம்:- வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம் பெறும். புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடம் உண்டு. பெரிய இடத்துத் தொடர்பும் பெருமையைத் தேடித்தரும்.

சிங்கம்:- அன்னிய வாசம் அமைதிக்கு உலை வைக்கும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

கன்னி:- குடும்பத்தில்குதூகலம் தவழும் களஸ்திர வழியால் நன்மைகளுக்கும் இடமுண்டு. பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர்

துலாம்:- அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். சிலர் வாழ்க்கையில் பொருள் முடக்கம் ஏற்படலாம். நண்பராலும் தொல்லையுண்டு.

விருச்சிகம்:- நினைத்தது நடக்கும். பந்து சனங்களின் கொண்டாட்டம் உண்டு. பிதா வழி மூலம் எதிர்பாராத பொருள் வரவும் கிடைக்கலாம்.

தனுசு:- வணிகர்களுக்கு வியாரபாரவிருத்தியுண்டு. புதிய முயற்சிகள் இன்று கூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாத இருக்கும்.

மகரம்:- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல் கணை தாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

கும்பம்;- உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின் மூலம், பகை தோன்றலாம். தொழில் துறையிலும் கவனம் வேண்டும்.

மீனம்:- இன்று உடல் சிறிது பாதிக்கப்படலாம். வாய்வுப்பதார்த்தங்களைத் தவிர்க்கவும். தொழிலிலும் கவனம் வேண்டும்.

திருமலை ரவீந்திரன்

## பொதுக்கூட்டம்

காரைநகர், வியாழன்

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுசங்க விசேடபொதுக் கூட்டம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கத் தலைவர் திரு. ச. சிவஞானம் தலைமையில் மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

## விபரம் சேகரிக்க அரச அதிபர் பணிப்பு

வவனியா, வியா,

கண்டாவளையில் இயங்கும் கிளிநொச்சி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் கிளிநொச்சி அசம்பாவிதத்தின் போது இறந்த - காணுமல் போனவர்களுடைய பூரண விபரங்களை பதிவு செய்யும்படி கிளிநொச்சிப் பதில் அரச அதிபர் திரு. கே ஸி. லோகேஸ்வரன் பணித்துள்ளார்.

கண்டாவளை சுற்றுலா விடுதியில் குறித்த அலுவலகம் இயங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சந்தை புனருத்தாரண வேலைகள் மீண்டும் ஆரம்பம்

கொடிகாமம், வியாழன்

பல லட்சம் ரூபா செலவில் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட கொடிகாமம் மத்திய சந்தை புனருத்தாரண வேலைகள் மீண்டும் துவக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை கச்சாய் உப அலுவலகத்தால் ஒப்பந்த அடிப்படையில் 7 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட கொடிகாமம் மத்திய சந்தை கட்டிட வேலைகள் இன்றுவரை பூர்த்தியாகவில்லை.

பல லட்சம் ரூபா செலவில் ஏழு ஆண்டுகளாக ஆரம்பிக்கப்பட்ட கட டிட வேலைகளின் அமைப்பு உரியமுறையில் அமையவில்லை என பொதுமக்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் பொதுநல நிறுவனங்கள் கண்டனம் தெரிவித்ததைத்தொடர்ந்தே மேற்படி கட்டிட வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

தற்போது புதிய ஒப்பந்த அடிப்படையில் பதின்மூன்று லட்சம் ரூபா செலவில் வேலைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

# கிளிநொச்சியிலிருந்து— 5,300 குடும்பங்கள் வெளியேற்றம்

வவனியா, வியா.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 5,300 குடும்பங்கள் அகதிகளாக வெளியேறியுள்ளார்கள். இது உத்தியோக பூர்வ கணக்கெடுப்பாகும்.

இம் மாவட்டத்தின் அரச சிவில் நிர்வாகம் முற்றுகச் சீர் குலைந்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. கடைகள் யாவும் பூட்டப்பட்டுள்ளன.

மின்சாரம் இல்லாததினுல் கிளிநொச்சிநகரமே இருளில் மூழ்கியுள்ளது. 50க்குமேற்பட்ட அரிசி ஆலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளன.

உணவின்றி மாடுகள் இரவில் கத்துகின்றன, நாய்கள் ஊளையிடுகின்றன,

## சட்டவிரோத மின்வயர்கள் தீயிடப்பட்டன

பண்டத்தரிப்பு, வியாழன்

பண்டத்தரிப்பு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் எடுத்துவந்த சுமார் நூறு வீடுகளை முற்றுகையிட்ட பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக மின்சாரப்பகுதி ஊழியர்கள், அங்கு பொருத்தப்பட்டிருந்த மின்வயர்களை கைப்பற்றிவந்து பண்டத்தரிப்பு சந்தைக்குமுன்பாகவுள்ள அலுவலக முன்றலில் தீயிட்டுக் கொழுத்தினுர்கள்.

புதன்கிழமை பிற்பகல் யாழ் அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்பு படடின உப அலுவலக மின்சாரப் பகுதியைச்சேர்ந்த ஊழியர்கள், இளைஞர்களின் அனுசரணையுடன் சென்று பண்டத்தரிப்பு அம்மன்வீதி செட்டியடைப்பு வீதி, சென்மேரிஸ் வீதி, சில்லாலைடச்சு வீதி ஆகிய இடங்களில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றவர்களின் வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த பெருந்தொகையான மின்வயர்களை கைப்பற்றிக் கொண்டுவந்தனர். பின்னர் அவற்றை உபஅலுவலக முன்றலில் போட்டு எரித்தனர்.

இப்பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் தொலையினுல் அடிக்கடி மின்தடை ஏறபடுவதாகவும், மின்சார சாதனங்கள் பழுதடைவதினுல் பட்டினம் கடந்த சில தினங்களாக இருளில் மூழ்கிக்கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## காரைநகரில் ஷெல் தாக்குதல்

காரைநகர், வியாழன்

கடந்த திங்கள் மாலை காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் களபூமி, பாலாவோடை மடத்துவளவு, தோப்புக்காடு, சாந்திபுரம், சருங்காலி ஆகிய கிராமங்களில் விழுந்து வெடித்தன.

மடத்துவளவைச் சேர்ந்த புவனேஸ்வரி என்பவர் தனது குழந்தையுடன், ஷெல்லுக்குப் பயந்துசெல்கையில் அவரருகே ஷெல் விழுந்து வெடித்தது. ஆயினும் அதிர்ஷ்டவசமாக யாரும் காயப்படவில்லை. இரு வீடுகள் சேதமடைந்தன.

இதுவரை காலமும் ஊர் காவற்றுறைப்பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்கள் இம்முறை காரைநகரினுள்ளேயே ஏவப்பட்டதால் மக்கள் கிலிகொண்டு அயற்கிராமங்களை நோக்கிச்சென்றனர்.

பவர்ஸ் உரம்
இணையற்றது

ABC

ஏ. பவர் அன் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி; 20551-6
ரூபா 2,000/- க்கும் மேல்

## "யாழ். உதைபந்தாட்ட லீக்"
# கழகங்களிடையே நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

''யாழ் உதைபந்தாட்ட லீக்'' விளையாட்டுக் சழகங்களிடையே வருடாந்தம் நடாத்தும் நொக்சவுட் உதைபந்தாட்டப் போட்டி இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

11 வீரர்கள் பங்கு பற்றும் இந்த ''நொக்கவுட்'' போட்டியில் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் பத்து விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. சென்றமாத முற்பகுதியில் இப் போட்டியை நடாத்துவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்போடப்பட்டதாக யாழ். உதை பந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர். ஜே. பி. ஸி. பிலிப் தெரிவித்தார்

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மேற்படி போட்டியை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ், உதைபந்தாட்ட லீக்கின் போட்டிக் குழு மேற்கொண்டு வருகிறது.

''யாழ், உதைபந்தாட்ட லீக்''கில் தற்காலிகஅங்கத்துவம் பெற்றுள்ள விளையாட்டுக் கழகங்களிடையேயும் ஒரு சுற்றுப்போட்டியை மிக விரைவில் தாம் நடாத்தவிருப்பதாக யாழ் உதைபந்தாட்ட லீக்கின் போட்டிக்குழுத்தலைவர் சற், சிங்கராஜர் தெரிவித்தார்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கில தற்காலிக அங்கத்துவம் பெற்ற 30க்கு மேற்பட்ட கழகங்கள் இருப்பதாகவும் இக் கழகங்கள் அனைத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் ஆர்வம் கொண்டுள்ளனவாவென்பதை பரீட்சித்துப் பார்க்கும் முகமாகவே தாம் இப் போட்டியை நடாத்த விருப்பதாகவும் இந்த போட்[டியில் சிறப்பா]கச் செயற்படும் விளையாட்டுக் கழகங்[களுக்கு] யாழ் உதைபந்தாட்ட லீக்கில் நிரந்தர அங்கத்துவம் வழங்[கப்படு]ம் [என]வும் திரு. சற் சிங்கராஜர் மேலும் தெரிவித்தார்.

இப் போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் உதைபந்தாட்ட லீக்கின் போட்டிக்குழுக் காரியதரிசி திரு. எம், தேவதாஸ் மேற்கொண்டுவருகிறா[ர்]. [வி]

## கண்காணிப்பு

பண்டத்தரிப்பு, வியாழன்

மாதகல், சேத்தாங்குளம், மாரீசன் கூடல், கடல்பகுதிகளில் இரவு வேளையில் ஓசை குறைந்த சிறுவிமானமொன்று கடந்த சில தினங்களாக ரோந்து சுற்றிக் கண்காணிப்பில் ஈடுபட்டுவருகின்றது.

NEW SCIENCE ACADEMY
B.M.C. க்கு முன் யாழ் பாணம்

**A/L 87 புதிய பகுதிகள் 26-07-86**

மின்னியல்: திரு. மணியம் B. Sc. சனி/ஞாயிறு 9.30
பௌதீக இரசாயனம்:
திரு யூனியன் மணியம் B Sc. சனி/ஞாயிறு 10-30
விலங்கியல்: திரு. இளங்கோவன் B Sc.
தாவரவியல்: திரு. சர்வா B Sc.
தூய, பிரயோக கணிதம்:
திரு. வெக்டர் வேலாயுதம் B Sc.
(A 1006)

**வெளிநாடு பிரயாணம்**

அமெரிக்கா
கனடா

செல்லவிருக்கும் பிரயாணிகளுக்கு தகுந்த ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும்.

வ.நல்லையா
அளவெட்டி.
(C3672)

**trust travel service**

11/A, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.
T. P. 24111

ஆகஸ்டில் மாணவர் விசாவுடன் நோர்வே செல்ல இருப்பவர்களுக்கு

11500/- விற்கு கொழும்பு / ஒஸ்லோ ஒரு வழிப்பாதை விமான டிக்கட் செய்து தரப்படும்.

மற்றைய உங்கள் விமான டிக்கட்டுகளின் கவர்ச்சி விலைக்குறைப்பையும் நாடுங்கள்:

**ரஸ்ற் ரவல் சேர்விஸ்**
(A 1005)

## "நகர வீதிகளைப் பேணுவதில்
# கண்டிப்பான கொள்கையை கடைப்பிடிப்பது அவசியம்"
## — ஆணையாளர்

யாழ்ப்பாணம், வெள்ளி

''யாழ். மாநகர பிரதேசத்திலுள்ள வீதிகளில் அனேக இடங்களில் கூடுதலான உயரத்தில் மேடுகள் அமைத்தோ அல்லது வெட்டிப் பள்ளமாக்கியோ வீதிகளை சேதப்படுத்தி போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்வதன் மூலம் துவிச்சக்கரவண்டி உட்பட பல்வேறு மோட்டார் வாகனங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே பொதுநலன்கருதி இந்த விடயத்தில் ஒரு கட்டுப்பாடான கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகும்.''

இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் பல வீதிகளில் போடப்பட்டிருக்கும் தடைகளால் ஏற்படும் விளைவுகளை கருத்திற்கொண்டு யாழ் மாநகர ஆணையாளர் திரு. சீ வீ. கே. சிவஞானம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இதுவரையில் அமைக்கப்பட்ட தடைகளில் எமது முன் அங்கீகாரம் பெறாதவற்றை உடனடியாக அகற்றிவிடுமாறு அவற்றை அமைத்தவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். இல்லாதுவிடின் அவற்றுக்கான அங்கீகாரத்தை கோரி உடன் எமக்கு எழுதினால் அதைப் பரிசீலித்து எந்தளவுக்கு வேக கட்டுப்பாடு தேவை என்பதை நிர்ணயித்து அந்தளவுக்கான ஒரு அமைப்பை மாநகராட்சி மன்றம் அங்கீகரிக்கும்

இவ்வாறு அங்கீகரிக்காத தடைகளை அகற்றவோ அல்லது மூடிவிடவோ நடவடிக்கையெடுக்கப்படும் என்பதுடன் இந்தவிடயத்தில் எமக்குப் பல்வேறு பொதுமக்களும் பொதுஸ்தாபனங்களும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கலையரசு ஞாபகதின நிகழ்ச்சிகள்

மானிப்பாய்

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் ஞாபகதின நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு நவாலி வை. எம். சி, ஏயில் நடைபெறவிருக்கிறது.

இந்த ஞாபகதினப் பேருரைக்கு மன்றத்தலைவர் பொ செல்வரத்தினம் தலைமை தாங்குவார், திரு. குழந்தை சண்முகலிங்கம், நடிகர் பிரான்சிஸ் ஜெனம், கலைஞர் ஏ. ரி. பொன்னுத்துரை, விதானையார் செல்வரத்தினம் ஆகியோர் சொற்பொழி வாற்றுவார்கள்.

ஞாபகார்த்த சிறப்புப் பேருரையை கலாநிதி. சி. மௌனகுரு நடாத்துவார் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்ச்சியும் இடம் பெறும். [த]

## இலங்கை திரும்பினார்

நெல்லியடி, வியாழன்

நெல்லியடியைச் சேர்ந்தவரும் 1970ம் ஆண்டுகளில் மக்கள் சீனா சென்று அக்குபங்ஷர் சிகிச்சை முறையில் பயிற்சி பெற்றவருமான டாக்டர் சாரதா தம்பிராஜா பல ஆண்டுகளின் பின் இங்கிலாந்திலிருந்து திரும்பி கொள்ளுப்பிட்டியில் உள்ள தமது இலவச அக்குபங்ஷர் சிகிச்சை நிலையத்தைப் புனரமைப்புச் செய்துவருகிறார்.

இக் கலத்தில் லீட்ஸ் என்னுமிடத்திலும் இவர் ஓர் அக்குப்பங்ஷர் சிகிச்சை நிலையத்தை நிர்வகித்து வருகிறார்

மேலும் அடுத்து அக்டோபர் மாதமளவில் மேற்கு பேர்லின் பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருக்கும் அக்குப்பங்ஷர் கருத்தரங்கு ஒன்றை அனைத்து ஐரோப்பிய நாடுகட்கும் பயன்தரும் முறையிலான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார்.

டாக்டர். ராதா தம்பிராஜா நெல்லியடியைச் சேர்ந்தவரும் முன்னாள் பருத்தித்துறைப் பாராளுமன்ற பிரதிநிதியுமான திரு, பொன். கந்தையாவின் ஏக புதல்வியாவர்.

## 'ஷெல்' காயம்

ஊர்காவற்றுறை, வியாழன்

தம்பாட்டி - காரைநகர் வள்ளங்கள் ஓடும் கடற்பாதையை நோக்கி காரைநகர் கடற்படைத்தளத்திலிருந்து 'ஷெல்' ஏவிவிடப்பட்டது. பலருக்குக் காயங்கள் ஏற்பட்ட இச் சம்பவம் செவ்வாய் மாலை நடைபெற்றது.

## கிராமசேவையாளர் சங்கம்

சாவகச்சேரி, வியா.

யாழ். மாவட்ட கிராமசேவையாளர் சங்கத்தின் புது வருட நிர்வாகிகளாகபின்வருவோர் தெரிவாகியுள்ளனர்.

இச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த வாரம் யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது

தலைவர்: திரு. வே. மார்க்கண்டு, செயலாளர் திரு. செ. மனோகரன், பொருளாளர் திரு. எஸ். செல்லத்துரை.

மற்றும் 11 பேர் கொண்ட கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

## பரீட்சை மண்டபம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் க. பொ. த. உயர்தர வகுப்புக்குத் தோற்றவிருந்த 1ம் 2ம், மண்டபப் பரீட்சார்த்திகளின் பரீட்சை மண்டபங்கள் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது மண்டபம் 3 நெல்லியடி மகாவித்தியாலயப் பெண்கள் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது இ பரீட்சை [1]-8-86 இல் ஆரம்பமாகும்.

இப்பரீட்சையின் கண்காணிப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று 27-7-86 அன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் காலை 9 மணுக்கு ஆரம்பமாகும்.

## நவாலியில் விசர்நாய் தொல்லை

சுண்டுக்குளி, வியாழன்

நவாலியில் விசர்நாய் தொல்லை அதிகரித்துள்ளது. அண்மையில் இப்பகுதியில் வீதியால் சைக்கிளிற் சென்ற இளைஞரை பாய்ந்து கடித்த நாயொன்று பின்னர் அவ்விடத்தில் நின்ற மரங்களைக் கடித்துவிட்டு இறந்துள்ளது.

மீண்டும் இப்பகுதியில் சில தினங்களுக்கு முன் விசர்நாய் ஒன்று வயோதிய மாது ஒருவரைக் கடித்துள்ளதால் இப்பகுதியில் மக்கள இரவு வேளையில் நடமாடுவதற்கு அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

## தீவுப்பகுதியில் பூரண ஹர்த்தால்

ஊர்காவற்றுறை வியாழன்

கடந்த காலங்களில் உரிமைப்போராட்டத்தில் உயிர் துறந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதோடு, வெள்ளிக்கிழமை தீவுப்பகுதி அனைத்து அரச தனியார் ஸ்தாபனங்கள் ஒருங்கிணைந்து ஒருபூரண ஹர்த்தாலை நடாத்துவதற்கு தீவுப்பகுதி தொழிலாளர் ஒன்றியமும், வெகுஜன அமைப்புக்களும் தீர்மானித்துள்ளன.

கூட்டங்கள் வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, ஆகிய இடங்களிலும்ம் நடைபெறும்.

**VACANCIES**

**Marketing Representative(Male)**
**Store-Keeper (Male or Female)**

We are leading distributors of local products in the North We need for our expanding marke--ting division a young hardworking energetic Sales Representative and a Store-keeper below 35 years of age

The applicants should call over on 26th July, 1986 Saturday) between 9.00 a m and 2 00 p m with original certificates and handwritten applications in which the names and addresses (Not relations) of two referees should be given.

MARKETING MANAGER
Man Power Marketing Services,
533 Stanley Road,
(Rasavin Thoddam Junction)
Jaffna.

(C 3661)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 25-7-86

# "லெபனன் நாட்டின் நிலை யாழ்ப்பாண மக்களுக்கு"

## — தொண்டமான்

சென்னை, ஜூலை. 24 "லெபனன் நாட்டிலிருப்பது போல யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள மக்கள் இன்னலுக்கு இலக்காகியிருக்கிறார்கள்" என்று கிராமியதொழிற்றுறை அமைச்சர் திரு எஸ்.தொண்டமான் சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் கூறினார்.

திரு. தொண்டமான் தொடர்ந்து பேசுகையில்' இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகள், கொள்கைத் திட்டக் குழுத்தலைவர் திரு ஜி பார்த்தசாரதி ஆகியோரையும் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலை குறித்து ஆராயவுள்ளதாக திரு தொண்டமான் தெரிவித்தார்.

தமிழ்ப்போராளிகள் அமைப்புக்களுடன் உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்ளும் வகையில் இந்தியா உதவுவது இலங்கைக்கு ஆக்கபூர்வமான வகையில் உதவி வழங்குவதாய் அமையுமென்று கூறிய அமைச்சர் தொண்டமான். இவ்விஷயம் குறித்து இந்தியாவுடன் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளப்போவதாகவும் கூறினார்.

அத்துடன் திரு. எஸ். தொண்டமான் இன்று இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசுவாரென்று எதிர்பார்க்கப் படுகிறது. (பி

## ரூ. 4 கோடி பிரிட்டன் வழங்கும்

யாழ்ப்பாணம் வெள்ளி

மட்டக்களப்புப் பல்கலைக் கழக விஞ்ஞான பீட விஸ்தரிப்பிற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் நாலு கோடி ரூபா வழங்க முன் வந்துள்ளது

இதன் மூலம் பல்கலைக் கழகம் விஞ்ஞான நூல்கள், உபகரணங்கள் மற்றும் ஆய்வு கூட தளபாடங்கள் பெற்றுக் கொள்ள வசதியாகவிருக்கும். சிவ)

## கிளிநொச்சி முகாமில் பயணிகள் பஸ்

கிளிநொச்சி, வியா.

கிளிநொச்சிப் பகுதிக்கு பிரயாணிகளுடன் செல்லும் தனியார் வாகனங்கள் கிளிநொச்சி இராணுவ முகாம் சென்று அனுமதி பெற்று வருகின்றன. ஆனையிறவு இராணுவத்தின் கோரிக்கையின் பேரிலேயே இவ் வாகனங்கள் கிளிநொச்சி இராணுவ முகாம் சென்று திரும்புகின்றன. எனத் தெரிவிக்கப்பட்டது.

## கண்ணிவெடி தேடுதலால் வாகனப் போக்குவரத்து 4 மணிநேரம் தாமதம்

மூதூர், வியா.

திருமலைப் பகுதியில் தரைக் கண்ணிவெடித் தேடுதல் வேட்டை காரணமாக நேற்று 4 மணித்தியாலங்கள் வாகனப் போக்குவரத்துச் சேவை தடைப்பட்டிருந்தது.

கந்தளாயிலிருந்து ஹபறணை வரையுள்ள வீதியில் ஆயுதப் படையினர் கண்ணிவெடிபுதைக்கப்பட்டிருக்கிறதா என்று தேடுதல் நடாத்தினர்.

இத் தேடுதல் வேட்டையால் திருமலை நகர் தொடக்கம், கொழும்பு வீதி 4ம்கட்டையடி வரை எந்தவித வாகனங்களும் உட்புகவிடாமல் காலைதொடக்கம் 4 மணித்தியாலங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது [மா]

## பரீட்சை மண்டபங்கள் சில மாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதும் யாழ் மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின் மாணவர்களுக்குப் பரீட்சை மண்டபங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இராணுவ முகாம் மிக அருகில் உள்ள சில கல்லூரி மாணவர் ளுக்கே பரீட்சை மண்டபங்கள மாற்றம் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ள பாடசாலைகளும், அப்பாடசாலை மாணவர்கள் பரீட்சை எழுதவுள்ள மண்டபங்களும் பற்றிய விபரம் பின்வருமாறு.

வட இந்து மகளிர் கல்லூரி 1ம், 2ம் பரீட்சை மண்டபங்கள் அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

வட இந்து 3ம் மண்டபம் நெல்லியடி ம. ம வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்துக்கும் வேம்படி மகளிர் பாடசாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன.

இம்முறை இப்பரீட்சை 62 பரீட்சை மண்டபங்களில் நடைபெறும். (ஐ)

## வகுப்பு தொழிலாளர் சங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இனப்படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிலாளர்கள் இன்று வேலைக்குச் செல்லாது துக்கதினமாக அனுஷடிக்குமாறு யாழ் வகுப்புத்தொழிலாளர்சங்கச்செயலாளர் திரு. செ. க. வேலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கார் கடத்தவில்லையாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

8 ஸ்ரீ 8151 இலக்கமுடைய கார் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டதெனப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறானதென்று கார் உரிமையாளரான அராலி இந்துக் கல்லூரி உபஅதிபர் திரு.ரி டானியல் அறிவிக்கிறார். [சிவ]

## வல்வை பிரஜைகள்குழு ஜனாதிபதிக்கு மகஜர்

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் 14ம் திகதி அதிகாலை வெளியே வந்து நடாத்திய தாக்குதலினால் ஒருவர் பலியாகியும், 6 பேர் படுகாயமடைந்தமை பற்றியும், பல வீடுகள் சேதமடைந்தமை பற்றியும் வல்வைப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு கே ஈ. திருநவுக்கரசு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இத்தகைய ராணுவ வன்செயல்கள் மேலும் இடம் பெறுதிருக்க ஆயுதப் படையினரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமென்றும் நாட்டு மக்களின் நலனைக் காப்பது நாட்டு ஜனாதிபதியின் கடமையென்றும மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வைத்தீஸ்வர அபி. சங்கம் நாளை கூடுகிறது

யாழ்ப்பாணம். வெள்ளி

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## உறுப்பினர் இருவருக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். தண்டனை

யாழ்ப்பாணம், வெள்ளி

கட்டுப்பாடு, ஒழுக்கம் தவறும் தமது இயக்க உறுப்பினர்கள்மீது ஈ.பி.ஆர்.எல் எவ். இயக்கம் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஒழுங்கு, கட்டுப்பாட்டின் அடிப்படையில் இவ்வியக்கத்தைச் சேர்ந்த இருவர்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

களவு. இயக்கப் பொருள் அபகரிப்பு, பெண்கள் மீது சேஷ்டை முதலான காரணங்களுக்காக இவர்களிருவரும் மொட்டையடிக்கப்பட்டு உயிருடன் பொதுமக்கள் பார்வைக்காக சாவகச்சேரி பஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த இருவரின் பெயர்கள் சுரேஷ், சைமன் ஆகும்.

இந்த இருவரின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் இவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டதாகவும். இவர்கள் தமது இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் பிரசுரமொன்று இவர்களுக்கருகில் காணப்பட்டது.

## அன்னையர் முன்னணி இன்று ஊர்வலம்

சுண்டுககுளி, வியாழன்

யாழ். அன்னையர் முன்னணியினர் இன்றும் நாளையும் கறுப்பு நாளாக அனுஷ்டிக்குமாறு தமிழ் மக்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக இவர்கள் நேற்று நகரின் பிரதான இடங்களிலும்; பாடசாலை, கல்விக் கந்தோர் மற்றும் பல்வேறு அரச திணைக்களங்களுக்கும் இருவர் இருவராகச் சென்று கறுப்புப் பட்டிகளை விநியோகம் செய்தனர்.

இவர்களது கோரிக்கைகிணங்க பாடசாலை மாணவ மாணவியரும், அரச ஊழியரும் நேற்று முழுநாளும் கறுப்புப் பட்டிகளையணிந்து கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இன்றைய தினத்தை நினைவு கூருமுகமாக இவர்கள் இன்று காலை 8 மணிக்கு கச்சேரி - நல்லூர் வீதியிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு யாழ். செயலகத்தைச் சென்றடைவர்

## ஊர்காவல்படை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பழைய பகைமையே இக் கொலைக்குக் காரணமென்று விசாரணையில் தெரியவந்தது.

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, வியாழன்.

இலங்கையின் அரசியல்யாப்பிற்கான பத்தாவது திருத்த சட்டமூலத்தைச் சர்வஜன வாக்கெடுப்பில்லாமலே திருத்தமுடியுமென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக இன்று சபாநாயகர் ஈ. எல். சேனநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### T. A, குணரத்தினம் – கல்வியங்காடு

T, A குணரத்தினம், நிர்வாகக் காரியதரிசி-சுலைமான் ஆஸ்பத்திரி, கொழும்பு காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பு அப்பாத்துரையின் அருமை மகனும், சாரதாவின் (ஆசிரியை Wolfendhal Girls School Colombo) அன்புக் கணவரும், சுதாசரின் (U K.) அன்புத்தந்தையும், T. A. சபாரத்தினம் (முன்னைநாள் நீர்கொழும்பு பிரபலவர்த்தகர்), திருமதி திரவியம் செல்லத்துரை, திருமதி அமுதமணி ராஜசேகரம், திருமதி ராசமணி காசிப்பிள்ளை (அளவெட்டி), செல்வி மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவர் அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் 24-07-86ல் நடைபெற்றது என்பதையும் அன்னாரின் பிறப்பிடமாகிய கல்வியங்காட்டிலும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதென்பதையும் வருத்தத்துடன் அறியத்தருகிறோம். (A 957)

### பொன்னம்பலம் மகாலிங்கம்

கொக்குவில் மேற்கைச்சேர்ந்த பொன்னம்பலம் மகாலிங்கம் (எஞ்ஜினியர்) நைஜீரியாவில் அகாலமரணமானார் அன்னார் பொன்னம்பலம் சொர்ணம்மா தம்பதிகளின் அருமை மகனும்; சந்திரமலரின் அன்புக்கணவரும். ஜசித்தா, லபன் ஆகியோரின் அன்புத்தந்தையும், தவறடனத்தின் அன்பு மருமகனும், இராசேந்திரம் (இளைப்பாறிய இலிகிதர்), சண்முகறட்னம் (ஆசிரியர்), சொர்ணகாந்தி, சொர்ணலிங்கம் (டாக்டர் இலண்டன்), றமணி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி, பரமேஸ்வரி (ஆசிரியை), செல்வறட்னம் (ஜேர்மனி), செல்வராசா (உபஅஞ்சலகம், இளவாலை) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-07-86 சனிக்கிழமை நைஜீரியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

'செல்வஸ்தான்',
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்.

(C 3687)

## மரண அறிவித்தல்

### A. சாமிநாதன்

(கார்ச் சாரதி)

வசாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆபிரகாம் நட்சேத்திரம் அவர்களின் அன்புப் புதல்வன் சாமிநாதன் (CL8610 இலக்க கார்ச்சாரதி) 24-07-86 அன்று மானிப்பாயில் காலமாகிவிட்டார். இவர் சிசிலியாவின் அன்புக்கணவரும், கிறிஸ்ரின் இன்பராஜா, தயானந்தராஜா. சுபாஷினி பிரான்சிஸ்கா, கனியூட் பவளராஜா, நோயல் அருள்ராஜா, கனிஷ்ரா ஆனந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும், பிரகாசியம்மா, செல்லம்மா, ஞானம்மா, அன்னமணி, காலஞ்சென்ற டானியேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தானியேல்-சந்தானம் அவர்களின் அன்புமருமகனும். சூசைப்பிள்ளை, பொன்ராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 2?-07-86 சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாயில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- மனைவி, பிள்ளைகள், சகோதரர், மருமக்கள்.

1ம் குறுக்கு,
இணுவில் ரோட்,
மானிப்பாய்.

[C-3711]

### க. சேனாதிராசா J. P.

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட க. சேனாதிராசா J. P. [முன்னாள் நகரசபை உபதலைவர் பருத்தித்துறை] வியாழக்கிழமை காலை மரணமானார். இவர் தங்கம்மாவின் அன்புக்கணவரும், பரமேஸ்வரி (உப அஞ்சல் அதிபர். மருதடி), வேலாயுதம், சுபத்திராதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவயோகலிங்கத்தின், உதவி அஞ்சல் அதிபர், பருத்தித்துறை) மாமனாரும், குமாரசாமி (மாணிக்கம்), காலம்சென்ற இராசரத்தினம் நடராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசம்மா, இராசேந்திரம் [A. O. பிராந்திய சுகாதாரப் பணிமனை, யாழ்ப்பாணம்], மகேஸ்வரி, பாலசிங்கம் (அதிபர் ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை), காலம்சென்ற D இராசசிங்கம் (W H O), இரத்தினசிங்கம், நவரத்தினம், நடராசா, செல்லம்மா ஆகியோரின் அன்புமைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 24-7-86 வியாழக்கிழமை மாலை 4 மணிக்குத்தகனம் செய்யப்பட்டது.

மனைவி, பிள்ளைகள்,
"கற்றனிவாசா",
பருத்தித்துறை.

[C-3677]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.